**தலைப்பு 324 - முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 324 - முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய பொழிப்பறிக்கை 2023 ஏப்ரல் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஜுன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றுவதன் முன்னேற்றம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பிரகாரம் திறைசேரி பிரதிநிதிகள் நியமித்துள்ள நிறுவனங்களிற்காக நடாத்த வேண்டியிருந்த 558 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்களில் 387 அதாவது 69 சதவீதம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் காலாண்டிற்கு 01 வீதம் ஆண்டிற்கு 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியதாக முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம் 2019.01.12 திகதி வெளியிட்ட DMA/01-2019 சுற்றறிக்கை ஊடாக அனைத்து அமைச்சின் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களிற்கு அறிவித்துள்ளதாகவும், 2022 ஆண்டினுள் நிலவிய எரிபொருள் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக அலுவலர்களை ஒன்று கூட்டவதற்கான அழைப்பித்தல்கள் மட்டுப்படுத்தப்பட்ட போதும் ZOOM தொழிநுட்பத்தின் ஊடாகவேனும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்களை நடாத்துவதன் தேவைப்பாட்டை எம்மால் விளிப்பூட்டப்பட்டதாகவும் இது தொடர்பாக பிரதாக உள்ளக கணக்காய்வாளர்கள்/உள்ளக கணக்காய்வாளர்களிற்கு விஷேட கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டமொன்றையும் நிதி அமைச்சில் 2022.09.08 திகதி நடாத்தியதுடன், அங்கு கணக்காய்வ மற்றும் முகாமைத்துவ குழுக்களை உரியவாறு நடாத்தும் | வருடாந்த திட்டங்களிற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தேவைப்பாடு விளிப்பூட்டப்பட்டதாகவும் காட்டப்பட்டிருந்தது. | |
| (ஆ) | செயலாற்றுகை அறிக்கை பிரகாரம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் உள்ளக கணக்காய்வு அலகுகளை வலுவூட்ட நடாத்தப்படும் பயிற்சி செயலமர்வுகளின் முன்னேற்றம் 66 சதவீதம் மாத்திரம் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மாகாண சபைகள் மற்றும உள்ளூராட்சி நிறுவனங்களின் உள்ளக கணக்காய்வு அலகுகளை வலுவூட்ட பயிற்சி செயலமர்வுகளை நடாத்த எதிர்பார்த்ததுடன் அதன் பிரகாரம் மாகாண சபை உள்ளக கணக்காய்வு அலகுகளில் தலைவர்களை இந்த திணைக்களத்தால் நடாத்தப்பட்ட பயிற்சி செயலமர்வுகளிற்கு பங்குபற்றச் செய்து கொண்டதாகவும், உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கீகார ஆளணியுடன் கூடிய உள்ளக கணக்காய்வு அலகு இஸ்தாபிப்கப்பட்டு இருக்காததால் அங்கீகார ஆளணியுடன் கூடிய உள்ளக கணக்காய்வு அலகுகளை 2022 திசெம்பர் அளவில் இஸ்தாபிக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அந்த உள்ளக கணக்காய்வு அலுவலர்களை இலக்கு வைத்து 2022 ஆண்டு இறுதி காலாண்டினுள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த திணைக்களத்தினால் திட்டமிட்டிருந்த போதும் உள்ளக கணக்காய்வ அலகுகள் உள்ளூராட்சி நிறுவனங்களில் 2022 ஆண்டினுள் இஸ்தாபிக்கப்படாததால் திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த முடியாது போனதாக காட்டப்பட்டிருந்தது. | உச்ச செயலாற்றுகை மட்டமொன்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | செயலாற்றுகை அறிக்கை பிரகாரம் பொதுத் துறையில் முறைகேடுகளை கண்டறிய பங்களிப்பதற்காக பூர்த்தி செய்துள்ள மற்றும் ஒப்படைத்துள்ள புலனாய்வுகளின் முன்னேற்றம் 77% மட்டத்தில் நிலவியது. | 2022 ஆண்டு ஆரம்ப பகுதியில் கொவிட் நிலைமை மற்றும் இறுதிப் பகுதியில் உக்கிரமான எரிபொருள் பற்றாக்குறை காரணமாக அனைத்து பொதுத் துறை நிறுவனங்களின் அலுவலர்களுக்கு வருவதற்கு மற்றும் நிறுவனங்களிற்கு சென்று வருவதற்கு அதிகமான தடைக்கள் ஏற்பட்டதாகவும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக செலவின மட்டுப்படுத்தல் மிகக் கடினமானதுடன் நிதி ஓதுக்கீடும் காலாண்டின் காலாண்டிற்கு இடம்பெற்றதால் ஆண்டு முழுவதும் நிறுவனத்திற்கு செல்ல, புலனாய்வு நடவடிக்கைகளுக்காக தகவல்களை திரட்ட தடை ஏற்பட்டதாகவும் ஆண்டு முழுவதும் நாட்டினுள் நெருக்கடியான நிலைமை காணப்பட்ட போதும் கூட புலானாய்வு நடவடிக்கைகளில் 77 சதவீதமான முன்னேற்றத்தை அறிக்கையிட்டுள்ளதாக காட்டப்பட்டு | உச்ச செயலாற்றுகை மட்டமொன்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

இருந்தது.

## 3. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதி அளவில் திணைக்களத்தின் 49 ஆன அங்கீகார பதவி எண்ணிக்கையில் 10 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களில் 6 சிரேஷ்ட மட்டத்திலான பதவிகளாக இருந்தன. | வெற்றிடங்களை நிரப்ப பொது நிர்வாக அமைச்சு மற்றும் நிதி அமைச்சை அறிவூட்டியுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆளணியில் வெற்றிடம் காணப்படுவது திணைக்கள செயலாற்றலிற்கு பாதகமான நிலையில் தாக்கம் செலுத்துவதாயின் அவ் வெற்றிடங்ககை நிரப்ப அல்லது அவ்வாறு இல்லையேல் அங்கீகார ஊழியர் எண்ணிக்கையை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |